கணபதிபுரம் பேரூராட்சி அலுவலகம்

ந.க.எண்.109/2020 நாள்04.04.2022.

**ஒப்பந்த அறிவிப்பு**

2019–2020–ம் வருடம் ராஜ்ய சபா பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாடு திட்டத்தில் கீழ்காணும் வேலைகள் செய்வதற்கு தகுதி வாய்ந்த இப்பேரூராட்சியில் பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மூடி முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் பேரூராட்சி செயல்அலுவலர் அவர்களால் 19.04.2022 அன்று பிற்பகல் 3.00 மணி வரை வரவேற்கப்படுகிறது. பணிவாரியான ஒப்பந்தப்புள்ளி நமூனாவினை http://tntenders.gov.in, மற்றும் http://tenders.tn.gov.in என்ற இணையதள முகவரிகளிலிருந்து இலவசமாக எடுத்துக் கொள்ளலாம், இந்த இணையதள முகவரிகளிலிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த முழு விவரங்களும் பெறலாம்.

**பொதுவானநேரம் மற்றும் நாள்**

| | | |
|---|---|---|
| அ) ஒப்பந்த நமூனாஇறக்கம் செய்தல் | : | 04.04.2022 மாலை 3.00 மணிவரை |
| ஆ) ஒப்பந்தப்புள்ளி சமர்பித்தல் | : | 19.04.2022 மாலை 3.00 மணிவரை |
| ஈ) விலைப்புள்ளிகள்திறத்தல் | : | 19.04.2022 மாலை 3.30 மணிவரை |

**நிபந்தனைகள்**

1. ஒப்பந்தப் புள்ளி படிவம் பேரூராட்சி அலுவலகத்தில் 18.04.2022 அன்று பிற்பகல் 3.00 மணிவரை உரியத் தொகை செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.
2. ஒப்பந்தப் புள்ளிகள் ஒவ்வொரு இனத்திற்கு தனித்தனியாக குறிப்பிடவேண்டும்.
3. மதிப்பீட்டில் 1% டேவணித் தொகையை வங்கி வரைவோலையாக **Executive Officer, Ganapathipuram Town Panchayat** என்ற முகவரியில் எடுத்து பாரத மாநில வங்கி, நாகர்கோவிலில் மாற்றத்தக்க வகையில் வங்கி வரைவோலை ஒப்பந்தப்புள்ளியுடன் இணைக்கப்பட வேண்டும்.
4. ஒப்பந்தக்காரர் தரச்சான்று (Class Certificate) தொழில்நுட்ப புள்ளியில் இணைக்கப்பட வேண்டும்.
5. ஒப்பந்தப்புள்ளிகள் தொழில்நுட்ப தகுதி மற்றும் விலைப்புள்ளி மூடி முத்திரையிடப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும். காலம் கடந்துவரும் டெண்டர்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.
6. ஒப்பந்தங்கள் பேரூராட்சி மன்றத்தில் அங்கீகாரம் பெற்றவுடன் வேலைக்கான உத்தரவு வழங்கப்படும்.
7. வேலை கிடைக்கப்பெற்றவர் 1% கூடுதல் வைப்புத்தொகை வங்கி வரைவோலையாக செலுத்திரூ.100/–க்கான முத்திரைத்தாளில் ஒப்பந்தம் எழுதிவைத்து வேலையை ஆரம்பிக்கவேண்டும்.
8. குறிப்பிட்ட தேதிக்குள் வேலையை ஆரம்பிக்காவிட்டால் ஒப்பந்தக்காரரால் அவ்வேலைக்கென செலுத்தப்பட்ட டேவணித்தொகை பறிமுதல் செய்ததாகக்கருதப்பட்டு, பேரூராட்சியின் நிதியில் சேர்க்கப்படுவதுடன் அவ்வேலைக்கு மீண்டும் வேறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு வேலை செய்து முடிப்பதில் ஏற்படும் அனைத்து இழப்புகளுக்கும், முந்தைய ஒப்பந்தக்காரரே பொறுப்பு ஏற்க வேண்டும்.
9. பணி குறித்த விபரங்கள்அடங்கிய தரமான பலகைகள் 4 அடி x 21/2 அடி (1.20M x 0.75M) அளவில் அமைக்கப்பட வேண்டும்.
10. வேலை உத்திரவில் குறிப்பிட்டுள்ள கால அளவிற்குள் வேலையை முழுமையாக முடித்துக் கொடுக்கவேண்டும். இல்லையேல் வேலையை ரத்துச்செய்யவும், அபராதம் விதிக்கவும் செயல் அலுவலருக்கு முழுஅதிகாரம் உண்டு. இதனால் ஏற்படும் எல்லா இழப்புக்கும் ஒப்பந்தக்காரர்களே முழு பொறுப்பாவார்கள்.

11. இத்திட்டப்பணி முடிக்கப்பட்டவுடன், **மூன்று ஆண்டுகளுக்கு குறையாத காலத்திற்கு பணிகளில் ஏற்படும் குறைபாடுகளை** இப்பணிகளை மேற்கொள்ளும் ஒப்பந்தக்காரரே தனது சொந்தச் செலவில் சீரமைக்க வேண்டும்.
12. Engineering Manual படி பணிக்கான ஒப்பந்தகாலத்திற்குள் பணியினை ஒப்பந்தகாரர் மந்தமான முறையில் மிகமெதுவாக பணியில் முன்னேற்றம் காண்பிக்கும் பட்சத்தில் (Penalty for slow progress) அபராதம் ஒப்பந்த மதிப்பில் 5% விதித்து பட்டியல் தொகையில் ஈடுசெய்யப்படும்.
13. Engineering Manual படி ஒருபொறியியல் பட்டம் கட்டிடபொறியியலில் தேர்ச்சி பெற்ற பொறியாளரை பணிதுவங்கி முடிக்கும் நாள் முடிய இப்பணிக்கு ஈடுபடுத்தப்பட்டு மதிப்பீட்டு தொகைக்கு உட்பட்டு பணியினை முழுமையாக முடித்து பயன்பாட்டிற்கு கொண்டுவருவதற்கு ஈடுபடுத்தப்பட வேண்டும். தவறும் பட்சத்தில் ஒப்பந்ததாரரிடம் மாதம் ஒன்றுக்கு ரூ. 3,000/– பிடித்தம் செய்து பட்டியல் தொகையில் ஈடு செய்யப்படும்.
14. பணி குறித்த விபரங்கள்அடங்கிய பலகைகள் வைக்கப்பட்டு, அதனை புகைப்படம் எடுக்கவேண்டும்.
15. ஒப்பந்தக்காரர் உரிய தொழிலில் 2017–18 முதல் 2021–22 பணிசெய்ததற்கான தணிக்கையாளர் சான்றொப்பமிட்ட நகல் இணைக்க வேண்டும் (Audited balance sheet for 5 years).
16. ஒப்பந்தம் கோரப்பட்டுள்ள பணியின் 15% மதிப்பீட்டிற்கு குறையாமல் ரொக்க தொகை அன்றைய தேதியில் தேசிய வங்கியில் வங்கியிருப்பு இருப்பதற்கான சான்று இணைக்கப்பட வேண்டும்
17. அனைத்து சான்றுகளும் சான்றொப்பம் இடவேண்டும்
18. வருமான வரிசான்று, விற்பனைவரி எண் இணைக்கப்படவேண்டும்
19. ஒப்பந்தக்காரர் கடந்த 5 ஆண்டுகளில் (2017–18 முதல் 2021–22 வரை) ஏதாவது 2 ஆண்டுகளில் அடியிற்கண்ட வேலையின் மதிப்பீட்டுத் தொகை போல மொத்தப் பணிகள் இரண்டரை மடங்குக்கு குறையாமலும் குறைந்தபட்சம் 3 ஆண்டுகளில் மேற்காணும் வேலையில் கண்டுள்ள பணிபோன்று ஒன்றினை மதிப்பீட்டைப் போல் ½ மடங்கு பணி செய்து முடித்திருக்க வேண்டும். அதற்கான சான்றொப்பம் பெற்று சான்றிதழ்களின் நகல்கள் இணைக்கப்பட வேண்டும். இதுபோன்ற முன் அனுபவ சான்றிதழ்கள் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளில் தெரிவிக்கப்பட்ட தகுதிச்சான்றிதழ்கள் இணைக்கப்படாத ஒப்பந்தப்புள்ளிகள் நிராகரிக்கப்படும்.
20. பணிகள் மேற்கொள்ளவிருக்கும் இடத்தினை பணி ஆரம்பிப்பதற்கு முன்னரும், பணிநடைபெறும் போதும் மற்றும் பணிமுடித்த பின்னரும் புகைப்படம் எடுக்கப்பட்டு ஆவணப்படுத்தப்படவேண்டும். எடுக்கப்படும் மூன்று புகைப்படமும் ஒரே இடத்தை காட்டும்படியாக இருத்தல் வேண்டும்.
21. பொருட்கள் ஒவ்வொரு நிலையிலும் அரசு தொழில்நுட்ப கல்லூரி சோதனைக் கூடத்தில் தரசான்றிதழ் பெறப்படவேண்டும்.
22. கூடுதல் விபரம் அறியவிரும்புவோர் அலுவலகநாட்களில் வந்து நேரில்அறிந்து கொள்ளலாம்.

<u>**பட்டியல்**</u>

| வ. எ ண் | வேலையின் பெயர் | எண் ணிக் கை | ஒப்பந்த மதிப்பு (ரூ. லட்சத்தில்) | டேவணித் தொகை ரூ. | ஒப்பந்த நமுனா ரூ | வேலை முடிக்கவே ண்டிய காலம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | **கணபதிபுரம் சந்திப்பு, சன்னதிதெரு பிள்ளையார் கோவில் சந்திப்பு, அனுமன்குளம் சந்திப்பு, ஆலங்கோட்டைவிளை சந்திப்பு ஆகிய இடங்களில் மினி ஹைமாஸ் அமைத்தல்.** | 4 | 16.00 | **16000.00** | **6240.00** | **3** மாதம் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 2 | கணபதிபுரம் டவர் சந்திப்பு, வண்டிமலச்சியம்மன் கோவில் சந்திப்பு, கணபதிபுரம்தெக்கூர் அம்மன்கோவில் சந்திப்பு, தெக்குறிச்சி சந்திப்பு ஆகிய இடங்களில் மினி ஹைமாஸ் அமைத்தல். | 4 | 16.00 | 16000.00 | 6240.00 | 3 மாதம் |
| 3 | லெமூர் கடற்கரை சுற்றுலா மைய கடற்கரை மேற்கு பகுதியில் உயர் கோபுர மின்விளக்குகள் அமைத்தல். | 2 | 12.00 | 12000.00 | 6240.00 | 3 மாதம் |
| 4 | லெமூர் கடற்கரை சுற்றுலா மையத்தின் முகப்பு மற்றும் வாகனம் நிறுத்தும் இடத்தில் உயர் கோபுர மின்விளக்குகள் அமைத்தல். | 2 | 12.00 | 12000.00 | 6240.00 | 3 மாதம் |
| 5 | லெமூர் கடற்கரை சுற்றுலா மையம் செல்லும் சாலைகளில் எல்இடி தெருவிளக்குகள் அமைத்தல். | 25 | 1.50 | 1500.00 | 780.00 | 3 மாதம் |
| 6 | லெமூர் கடற்கரை சுற்றுலா மையம் செல்லும் சாலைகளில் சோலார் மின்விளக்குகள் அமைத்தல். | 5 | 4.20 | 4200.00 | 780.00 | 3 மாதம் |
| | | | **61.70** | **61700.00** | **26520.00** | |

/ஒப்பம்/
**செயல்அலுவலர்,**
**கணபதிபுரம் பேரூராட்சி.**

**<u>பெறுநர்</u>**

கணபதிபுரம் பேரூராட்சியில் பதிவுபெற்ற
எல்லா ஒப்பந்தக்காரர்களுக்கும்.

**<u>நகல்</u>**

1. ஆகஸ்தீஸ்வரம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட அனைத்து பேரூராட்சி செயல் அலுவலர்களுக்கும்.
2. நாகர்கோவில் மண்டல பேரூராட்சி உதவிஇயக்குநர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது
3. உதவி செயற் பொறியாளர் ( பேரூராட்சிகள்) நாகர்கோவில்
4. தலைவர், கணபதிபுரம் பேரூராட்சி
5. விளம்பரபலகைக்கு.